## இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர்

# எம்.வெங்கையா நாயுடு பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஜீலை 2 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

**இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்.**

**உங்களுக்கு மகிழ்ச்சியும், ஆரோக்கியமான வாழ்க்கையும் அமைந்திட வாழ்த்துக்கள்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை!

சியோல், ஜீலை 2 –

கொரிய தீபகற்பத்தில் வட கொரியா தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாக கருதும் தென் கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. மேலும், தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் வந்தால் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரித்து வருகிறது. இதனிடையே, அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா இணைந்து கடந்த சில நாட்களுக்கு முன் கூட்டு ராணுவ பயிற்சியில் ஈடுபட்டன. இந்த கூட்டு ராணுவ பயிற்சிக்கு வடகொரியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

இந்நிலையில், வடகொரியா நேற்று ஏவுகணை சோதனை நடத்தி யுள்ளது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் இடையேயான கூட்டு ராணுவ பயிற்சி நிறைவடைந்த நிலை யில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது.

வடகொரியா கடந்த 26ம் தேதி ஏவுகணை சோதனை நடத்திய நிலையில் 10 நாட்களுக்குள் 2வது முறையாக மீண்டும் ஏவுகணை சோதனை நடத்திய சம்பவம் கொரீய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் காணை வடக்கு ஒன்றியத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கடையம் ஊராட்சியில் பணிக்குழு பூத்களை ஆய்வு செய்து பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், ஒன்றியச் செயலாளர் ஆர்.முருகன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா: அ.தமிழரசன் தலைமையில்

# 169-வது வட்டத்தில் கால்பந்துபோட்டி! அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசுகள் வழங்கினார்!

## இரா.துரைராஜ் - எஸ்.குணசேகரன் - எல்.ஆரோக்கியராஜ் பங்கேற்பு

சென்னை, ஜுலை 2 -

சைதை 169-வது வட்டத்தில் அ.தமிழரசன் தலைமையில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியை இர.துரைராஜ் துவக்கி வைக்க, அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

சைதை கிழக்கு பகுதி 169 வது வட்டத்தில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, அ.தமிழரசன் தலைமையில் 28.06.2024 அன்று மாபெரும் கால்பந்து போட்டி நடைபெற்றது. இதில் காலை 9.30மணி அளவில் வட்டசெயலாளர் எல். ஆரோக்கியராஜ், மாவட்ட பிரதிநிதி இரா.சுதாபிரியன், அ.ஆரி, துரைசரவணன், மை. அருள்ராஜ், அ.ஆனந்தராஜ், ஆ.பரணி முன்னிலையில் பகுதிச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் போட்டியை டாஸ்போட்டு துவக்கி வைத்தார். இதில் மொத்தம் 16 அணிகள் கலந்துகொண்டன.

அன்று மாலை 6.30 மணி அளவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசுத் தொகை மற்றும் கோப்பைகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பகுதி செயலாளர் இரா.துரைராஜ், மாவட்ட அவைத் தலைவர் சைதை எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், மா.அன்பரசன், பகுதி துணை செயலாளர்கள் மு. ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, வட்ட செயலாளர் எல்.ஆரோக்கியராஜ், மாவட்டப் பிரதிநிதிகள் ஏ.மஜீத், நந்தகோபால், 169 வது வட்ட நிர்வாகிகள் அ.ஆரி, துரைசரவணன், மு. சந்திரா, மை.அருள்ராஜ், ஜோ.சசிகுமார், வெ.சத்தியநாராயணன், மேகநாதன், நவீன்குமார், வீடியோ சரவணன், கவிதா, அப்புகுட்டி, 169அ வட்ட நிர்வாகிகள் வே.கோதண்டம், சைதை ஆ.வரதன், டி.கண்ணன், முருகையன், சாந்தி, கரிமுல்லா, சம்பத், ரஞ்சித், ஷெரிப், சௌரிமுத்து, வீரா, ஆர்.தமிழன்பன், ஆயிஷா, ராசாத்தி ஆகியோர் கலந்து கொண்டனர்,

காலை முதல் மாலை வரை வட்டசெயலாளர் எல். ஆரோக்கியராஜ் நிகழச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கினார். இறுதியில், ஜெ.கே.தவமணி, ஆர்.மணிமுத்து ஆகியோர் நன்றி கூறினர்.

## எம்.எல்.ரவி தலைமை ! தா.இளையஅருணா - வ.பெ.சுரேஷ் முன்னிலை !

# 48(அ) வட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்! 300 நபர்களுக்கு நலஉதவிகள்!

## கோவி.லெனின் சிறப்புரை ! ஆர்.டி.சேகர் - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி வழங்கினர் !

சென்னை, ஜுலை 2 -

இராயபுரம் மேற்கு பகுதி 48(அ) வட்டம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் 300 நபர்களுக்கு வழங்கபட்டது.

வட்ட செயலாளர் எம்.எல். ரவி தலைமை வகித்தார்.தா. இளைய அருணா, வ. பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மு.கோபி, வி.விஜய லட்சுமி விஜயகுமார் எம்.சி, ரெயின்போ என்.விஜய குமார், நா.சண்முகம், நா.கஜேந்திரன், எம்.கே.இஸ்மாயில், எம்.எம்.டி.சலாவுதீன், கு.ரமேஷ், சு.திருஞானம், இ. மதன், இ.மலையம்மாள், எஸ். ரமேஷ், ஜி.எஸ். முருகன், இரா.பாலன், எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலாலட்சுமணன், ஜெ. கௌரீஸ்வரன், மோ.ரவிக்கு மார், ரா.இம்ரான், அத்திரிபேகம், இரா. ரவீந்திரன், கோ.வேலுமணி,

கா.லோகநாதன், வி.சரவணன், எஸ். உமாபதி, ஜி. கொலம்பஸ், கே. விஜய், பி. கலில், பா. லியகாத்பாஷா, வி. நந்தகுமார், ஆட்டோ. தேவராஜ், இரா.சரவணன், ரேவதி, ஜாகிர்பேக், திவ்யபாரதி, எம். குமரவேல், பாஸ்கர், பானு, இஸ்மாயில், கே.கண்ணன், இ.மணிகண்டன், வேணு, ஆகியோர் வரவேற்றனர்.

இதில் தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் சிறப்புரையாற்றினார். சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, ஐட்ரீம். ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

நா.மனோகரன், நாகம்மை, வே.சிவகுமார், ஜே.கே. நாதன், கா.கோவிந்தசாமி, லியோ.டி.சுரேஷ், லட்சுமி வேலு, கார்த்திக்செங்குட்டுவன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, எ.ரமேஷ்பாபு, கே. என். பார்த்திபன், கோ.ஹரீஷ் குமார்,

தா.ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், ஆர். வி.கணேஷ், பி.கண்ணன், தா.ரவி, லாட்டு கடை. எஸ்.கே. செந்தில்குமார், சுவிஸ்.இளையராஜா, எம்.எம்.சந்துரு, எம்.எம்.செந்தில்குமார், இரா.சரவணன், எஸ். யுவராஜ், இரா.பொன்முடி, எம். பாலசுப்பிரமணி, எஸ்.கலைச்செல்வன், ஐ.சி.எப். பழனி, அத்தோ.முனுசாமி, நா.பாரி,

வே.குமார், ஜெய்சங்கர், சதீஷ், சசிதரன், என்.வேதா, ஜெ.ஸ்ரீதர், சுரேகா, செல்வகுமார், என்.தணிகாசலம், தரணி, எம்.எம்.செந்தில்குமார், வி.ஷாஜகான், கே.முனுசாமி, ஆர்.பிருந்தா, டி.கல்யாணி, என்.அப்துல்மாலிக், பிரேம், டி.சங்கர், ராஜி, எஸ்.இந்திரா, பி.சம்பூர்ணம், கே.ஏ. அமிரேசன், கே.அப்துல்ஹமீது, ஜி.ரசூல்பி, பி.பாஸ்கர், கே. தணிகாசலம், எஸ். தேவி, ஆர். முரளி, எண்.முரளி, சுரேஷ், கே.சீனிவாசன், பாலாஜிலால், ஜி.வரதன், எஸ்.கஜேந்திரன், பி.ராஜேஸ்வரி, வி. தயாளன், ஜி.மூர்த்தி, எஸ்.ரமேஷ், ஷகீல் பாஷா, உதயா, கே.கலையரசன், இ.மூர்த்தி, கே.ஷாகின்சா, இ.சாமிக்கண்ணு, குருமூர்த்தி, கா.சீனிவாசன், இரா. விக்னேஷ், பி.விஷால், கிஷோர்ஷா, எஸ்.முகமதுஇஷா, எஸ். சந்தோஷ்குமார், எல்.மணிகண்டன், எஸ்.வேணு, மா.அஸ்லாம், அப்துல்லா, ஆட்டோ பி.கவுஸ், ஆர். மாலிக், எஸ்.அகமது, பூக்கடை. அல்தாப், டிபன்கடை. ராஜி, ஏ.எஸ்.முகமது, சுபேர், எம். பாயாஸ், பாஷா, கே.வேலு, எம்.சாகுதீன், அமித், ஐ. உசேன், வைபயாஸ்ரீ, எம்.அப்துல்லா, கே. வாசிம்ரான், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

எம்.எம்.சுஜாவுதீன், ஜி.தனசேகர், நா.ஆஷா, ஆகியோர் நன்றி கூறினர்.

## சொகுசுப் பேருந்துகளை மீண்டும் இயக்குக! புறநகர்ப் பேருந்து பணிமனை உருவாக்குவீர்!

# சோழிங்கநல்லூர் தொகுதிக்கு கூடுதல் வழித் தடம் - பேருந்துகளை இயக்க வேண்டும்!

## சட்டப் பேரவையில் ச.அரவிந்த் ரமேஷ் வலியுறுத்தல்!

சென்னை. ஜுலை 2 -

சட்டப் பேரவையில் சோழிங்கநல்லூர் தொகுதி உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் சா.சி.சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:

**ச. அரவிந்த் ரமேஷ்:** சோழிங்கநல்லூர் தொகுதியில் கண்ணகி நகர், பெரும்பாக்கம், செம்மஞ்சேரி ஆகிய திட்டப் பகுதிகளில் 50,000 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகிறார்கள். அவர்கள் சென்னைக்கும் மற்ற பகுதிகளுக்கும் செல்வதற்குக் கூடுதலாக வழித்தடங்களையும், கூடுதலாக பேருந்துகளையும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் 2008 ஆம் ஆண்டு OMR, ECR, வேளச்சேரி மெயின் ரோடு எல்லாம் கூடுதலாக அந்தக் குளிர்சாதன பேருந்துகள் இயக்கப்பட்டது. அந்தப் பேருந்துகளெல்லாம் கடந்த கால ஆட்சியில் நிறுத்தப்பட்டது. அதையும் மீண்டும் விட வேண்டும்; அந்தப் பகுதியில் இயக்க வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதேபோல, நம்முடைய சோழிங்கநல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு புறநகர்ப் பகுதிகளுக்கு பேருந்துகள் அதிக அளவில் இங்கிருந்து இயக்கப்படுகின்றன. தனியார் வாகனங்கள், அரசுப் பேருந்துகளெல்லாம் அதற்கு ஒரு புறநகர்ப் பேருந்து பணிமனையை உருவாக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தப் பாதை குறித்து ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்து, சோழிங்கநல்லூர் பகுதிக்கு குளிர்சாதன பேருந்துகள் இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். இப்போது பழைய பேருந்துகளை மாற்றி வருகிறோம். முதலில் புதிய பேருந்துகள் வாங்குவதற்கான ஆணையை முதல்வர் அவர்கள் பிறப்பித்து, அந்தப் பேருந்துகளெல்லாம் வாங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சென்னைக்கான தாழ்தளப் பேருந்துகள் அடுத்த மாதம் ஜுலை மாதத்தில் வரவிருக்கிறது. அந்தப் பேருந்துகள் முதல்வர் அவர்களுடைய பொற்கரங்களால் துவக்கி வைக்கப்பட இருக்கிறது. அதற்குப்பிறகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தக் கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதே போன்று, பேருந்துப் பணிமனையைப் பொறுத்தவரை சென்னை மாநகரத்திலே போதுமான அளவுக்குப் பேருந்துப் பணிமனைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் இயக்குவதற்கு இப்போதைக்கு அரசினுடைய நிதிநிலைக்கு அதைச் செய்வதற்கு வாய்ப்பில்லை என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் பதிலளித்தார்.





தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தீர்மானக்குழுச் செயலாளர் மீ.அ.வைத்தி யலிங்கம் அவர்களின் 85வது பிறந்தநாளினையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

# மருத்துவர்கள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜீலை 2-

மருத்துவர்கள் நாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தொண்டுள்ளமும் அர்ப்பணிப்புணர்வும் கொண்டு சேவையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெறும் மருத்துவர்கள் அனைவருக்கும் "மருத்துவர்கள் நாள்" வாழ்த்துகள்!**

**மதுரை தோப்பூரில் உள்ள அரசு காச நோய் மருத்துவமனையைத் தனது நிர்வாகத் திறனால் மேம்படுத்தி ஓய்வு பெற்றுள்ள மருத்துவர் காந்திமதிநாதன் அவர்களை நேரில் பாராட்டி மகிழ்ந்தேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம், குமிலியில் இயங்கி வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட பள்ளியை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பார்வையிட்டு பள்ளி மாணவ மாணவிகளிடம் உரையாடி மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி மற்றும் உணவு பற்றி கேட்டறிந்தார். மாணவர்களின் மீது சிறப்பு கவனம் செலுத்தி தேர்ச்சி விகிதத்தையும், மதிப்பெண்களையும் அதிகப்படுத்த வேண்டும் என்று ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் அங்கு தாட்கோவின் மூலம் கட்டப்பட்டு வரும் மாணவிகளுக்கான விடுதி கட்டிடத்தின் கட்டுமான பணிகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் தாட்கோ உடன் இருந்தனர்.

## கூத்தாநல்லூரில் ரூ.1.30 கோடியில்

# புதிய காவல்நிலையக் கட்டிடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் நன்றி!

திருவாரூர், ஜுலை 2 -

திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கூத்தாநல்லூர் பகுதிக்கு புதிய காவல் நிலையம் கட்ட ரூ.1.30 கோடியில் திட்டம் அறிவித்த தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், முயற்சிகளை மேற்கொண்ட சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணனுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கூத்தாநல்லூர் வட்டம் பெருமளவில் இஸ்லாமிய மக்கள் வசிக்கும் பகுதியாகும். சிறுபான்மை மக்களுக்கு என்றைக்கும் பாதுகாவலாக விளங்கும் திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூத்தாநல்லூரை தாலுக்காவாக தரம் உயர்த்தி, மாணவ - மாணவிகளின் கல்விக்கு கல்லூரி, புதிய வகுப்பறை கட்டிடங்கள், சாலைகள், நீர்நிலைகள் தூர்வாரு தல், மருத்துவமனைகள் தரம் உயர்த்துதல், அரசு அலுவலக கட்டிடங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தந்து மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.


இந்த நிலையில் 1995ம் ஆண்டு முதல் கூத்தா நல்லூர் நகரத்தில் இயங்கிவரும் ஊராக காவல் நிலைய பழைய கட்டிடத்தை மாற்றி புதிய கட்டிடம் கட்டி, காவல்நிலையத்தினை மேம்படுத்த பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணனிடம் வைத்த கோரிக்கையை, அவர் தமிழ்நாடு முதல்வரிடம் வைத்த நிலையில், அதனை தாயுள்ளத்தோடு பரிசீலித்த முதல்வர் அவர்கள் ரூ 1.30 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்ட அறிவித்துள்ளார்.

முதல்வரின் இந்த அறிவிப்புக்கு பொதுமக்களும்,சமூக ஆர்வலர்களும், அனைத்து அரசியல் இயக்கங்களும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், முயற்சிகளை மேற்கொண்ட சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணனுக்கும் நன்றியை தெரிவித்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# புலவர் கோவிந்தன்

## ஜுலை 2 (1991)



**1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.**

**1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.**

**பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு "அண்ணா விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**"கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**